2010 நவம்பர் 10] *[திரு. மு.க. ஸ்டாலின்]*

பிற்பகல் 12-30

இதுகுறித்து காவல் துறையினர் முறையாக வழக்குப் பதிவு செய்து, புலன் விசாரணையின்போது, இந்த வழக்கினுடைய எதிரிகளாக வண்ணை சத்தியா, சசிக்குமார் மற்றும் ஹரிகுமார் ஆகியோர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த வழக்கிலே மற்ற எதிரிகளைக் கைது செய்யத் தேவையான நடவடிக்கைகளை காவல் துறை எடுத்து வருகிறது. வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது. இந்த அரசு இதுகுறித்து உரிய நடவடிக்கையை, உரிய வகையில் எடுக்கும் என்ற உறுதியை நான் இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ்.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2011 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதின்மூன்றாவது முதல் இருநூற்று பதினேழாவது வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2011 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பத்தாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.